பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : வைகாசி 5 (18—5—68) சனி ★ வெளியூர் : வைகாசி 6 (19—5—68) ஞாயிறு [இதழ் : 280

தமிழகத்தில் நில அகழ் கருவிகள் தொழிற்சாலை

அமெரிக்க நிறுவனத்துக்கு அனுமதி கிடைக்குமா ?

புதுடில்லி, மே 17—
"நில அகழ் கருவிகள் தொழிற்சாலை ஒன்றைத் தமிழகத்தில் நிறுவ அமெரிக்க நிறுவனம் ஒன்று முன்வந்திருக்கிறது ; இதுபற்றி மத்திய அரசுக்குத் தமிழக அரசு எழுதியுள்ளது" என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அண்ணு அவர்கள் தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. பக்ருதீன் அகம்மதைச் சந்திக்கவிருக்கிறார்.

டில்லிக்கு அண்ணுவின் யோசனை

'திட்டச் செலவுக்கு நான்கு வழியில் பணம் திரட்டலாம்'

'இனி மாநிலங்களில் புதிய வரி விதிக்க முடியாது'

புதுடில்லி, மே 17—
நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநிலங்கள், புது வரி விதிப்பு மூலம் ரூ. 1,000 கோடி அளவுக்குத் திரட்டுவது என்பது இயலாத காரியம் என்று தாம் தேசீய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கூறியதாக முதலமைச்சர் அண்ணு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளையொட்டிப் பழைய வரி இனங்களின் மூலமே சிறிது கூடுதலான பணத்தைத் திரட்டலாமே தவிர, புதிய வரி விதிப்பு என்பது முடியவே முடியாது" என்று கூறிவிட்டதாக அண்ணு அவர்கள் தெரிவித்தார்கள்.

தேவையான நிதி வசதிகளை மத்திய அரசு நான்கு இனங்களின் மூலம் திரட்டலாம் என்று தாம் யோசனை கூறியதாகத் தெரிவித்து அந்த நான்கு இனங்களையும் அண்ணு அவர்கள் குறிப்பிட்டதாவது :—

1. நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் பாதுகாப்புத் துறைச் செலவுகளைச் சிக்கனப்படுத்துவதன் மூலம் கணிசமான தொகையை மிச்சப்படுத்தலாம்.
2. பொதுத்துறை நிறுவனங்களில் போதுமான இலாபம் ஏற்படும்படிச் செய்து அந்தப் பணத்தைத் திரட்டலாம்.
3. வரி ஏய்ப்புகளைத் தடுத்து வரி முழுவதையும் வசூலிக்க வேண்டும்.
4. மத்திய அரசு நிர்வாகச் செலவுகளைக் குறைத்துச் சிக்கனப்படுத்த வேண்டும்.

மேலும் முதலமைச்சர் அண்ணு அவர்கள் கூறியதாவது :—

"மாநிலங்களுக்கு மத்திய அரசு, மக்கட் தொகை அடிப்படையில் நிதியுதவி அளிக்க வேண்டும் என்று வற்புறுத்தினேன். ஒரு மாநிலத்தில் நல்ல சாலைகளும், கல்வி நிறுவனங்களும் இருப்பதுமட்டும் முன்னேற்றத்துக்கு அடிப்படையாக இருக்கக்கூடாது என்றும், இப்படி நல்ல சாலை வசதிகளும், கல்வி நிறுவனங்களும் இருப்பதன் காரணமாக ஒரு மாநிலத்துக்கு நிதியுதவியை மத்திய அரசு குறைக்கக்கூடாது என்றும் வற்புறுத்தினேன்."

120 மைல் வேகத்தில் பர்மாவில் புயல்

ஏராளமானேர் மாண்டனர்

இரங்கூன், மே 18—
பர்மாவில் ஏற்பட்ட புயலினுல் இதுவரையில் 1,073 பேர் மாண்டதாக உறுதி ஆகியுள்ளது ; போக்குவரத்து வசதி மீண்டும் ஏற்பட்டு, மேற்கொண்டு தகவல் கிடைக்கும் போது இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும்.

வெள்ளியன்று மணிக்கு 120 மைல் வேகத்தில் பர்மாவின் மேற்குக் கரையில் புயல் வீசியது.

15,000 குடும்பங்கள் வீடிழந்து தவிக்கின்றன.

2,000 வீடுகளுக்கு மேல் அடியோடு நாசமடைந்துள்ளன.

10,000 ஆடு, மாடு, கோழிகள் மாண்டுள்ளன.

கலப்படம் செய்தவருக்கு தண்டனை

ஆரணி, மே 18—
ஆரணி மார்க்கெட் ரோடில் பல சரக்கு வியாபாரி ஒருவர், கலப்பத்துடன் வர்ணம் பூசிய துவரம்பருப்பை விற்பனை செய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில். சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட், அவருக்கு ரூ 1,000 அபராதமும், 6-மாதச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்புக் கூறினுர்.

எளிய மக்களுக்கு ஊக்கமூட்டும் வகையில் திட்டமில்லை

பாசனத்துக்குப் பருவ மழையையும் உரத்துக்கு டில்லியையும் எதிர்பார்த்திருக்கும் அவலநிலை

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் முதலமைச்சர் அண்ணு வருத்தம்

புதுடில்லி, மே 17—
"வேளாண்மை, முக்கியமாக இரண்டு அம்சங்களைப் பொறுத்திருக்கிறது ; ஒன்று—தண்ணீர் வசதி; இரண்டாவது—உர வசதி. முதலாவதுக்கு பருவ மழையையும், இரண்டாவதுக்கு மத்திய அரசையும் எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

"இதை நம்பியிருப்பது குறையவேண்டும் என்று நாடு நினைக்கிறது ! ஆனுல் அதை இன்னும் தவிர்க்கும் நிலையில் நாடு இருக்கவில்லை"

என்று, தமிழக முதலமைச்சர் அண்ணு அவர்கள், தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் வருத்தத்துடன் குறிப்பிட்டார். மேலும் அவர் விளக்கியதாவது :—

உருப்படியான திட்டங்கள் வகுக்கப்படவில்லை !

"மக்களிடையில் பின்னடைந்த பிரிவினருக்கு உதவுவது முக்கியம் என்று கருதும் கொள்கை வரவேற்கத்தக்கது ; ஆனுல், இதற்கான உருப்படியான திட்டங்கள் வகுக்கப்படவில்லை..

"உணவு உடை உறைவிடம், கல்வி, வேலை வாய்ப்பு, நிலையான விலைவாசி முதலியவை உறுதி செய்யப்பட்டால்தான் திட்டத்தில் எளிய மக்களுக்கு ஊக்கம் பிறக்கும் ; திட்டம், எளிய மக்களுக்காகவே யாகும்.

வளர்ச்சி காண....!

"பாசன வசதிகள் உத்தரவாதமாகக் கிடைத்தால், வேளாண்மைத் துறையில் 5 சதவிகித வளர்ச்சியைக் காணலாம்.

வரி விதிப்புக்கு இனி இடமில்லை

"கூடுதல் வரி விதிப்புச் சம்பந்தப்பட்டவரையில், தமிழகம் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு வரிகளை விதித்துவிட்டது. இனி வரி விதிப்புக்கே இடமில்லை.

வரிகளின்மூலமும் மற்ற வகைகளிலும் கூடுதல் நிதி வசதிகளைத் திரட்டுவதில் மத்திய அரசுதான் அதிகப் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும்.

சிக்கனத்திற்கு வாய்ப்பு இருக்கிறது

பாதுகாப்பு, நிர்வாகச் செலவினங்களில் சிக்கனத்தைக் கையாளவேண்டும் ; அதற்குக் கணிசமாக வாய்ப்பு இருக்கிறது.

நடவடிக்கை அவசியம்

வரி ஏய்ப்பு, வரி கொடுக்காமல் தவிர்த்தல் ஆகியவற்றுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

ஒத்துழைத்துச் செயலாற்றவேண்டும்

மத்திய வருமான வரித் துறை, மாநிலங்களில் ரெவினியூ, விற்பனை வரித் துறைகளுடன் நெருங்கி ஒத்துழைத்துச் செயலாற்றவேண்டும்.

மத்திய அரசின்கீழ் உள்ள தொழில் நிறுவனங்கள் அதிக அளவு திறமையுடன் இயங்குமாறு செய்யப்படவேண்டும் ; அப்போதுதான் வளர்ச்சிப் பணிகளுக்குப் போதுமான இலாபத் தொகை கிடைக்கும்.

'நன்முடிவு காண என்னுடன் ஒத்துழையுங்கள்'

'அவசரப்பட்டுப் போராட்டங்களைத் துவக்கவேண்டாம்'

கோவை ஆலைத் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் அண்ணு வேண்டுகோள்

புதுடில்லி, மே 17—
"கோவை ஆலைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நான் முழு முயற்சியையும் எடுத்துக் கொண்டிருப்பதால், வேலைநிறுத்தம் போன்ற போராட்டங்களைத் துவக்க வேண்டாம் என்று தொழிலாளர்களையும், தொழிற் சங்கங்களையும் கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பதிலாக என்னுடன் ஒத்துழைத்து இச்சிக்கலானப் பிரச்சினைக்கு ஒரு முடிவுகாண வருமாறு தொழிலாளர்த் தலைவர்களை அழைக்கிறேன்"

என்று புதுடில்லியிலிருந்து முதலமைச்சர் அண்ணு அவர்கள், கோவை நெசவாலைத் தொழிலாளர் தலைவர்களுக்கு ஒரு உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இந்து மஜ்தூர் சபாவும், பொதுவுடைமைக் கட்சிச் சார்புத் தொழிற்சங்கங்களும் கோவை ஆலைகளில் மே 20-ம் நாள்முதல் வேலைநிறுத்தம் துவங்கப் போவதாக அறிவித்துள்ளதை ஒட்டியே அண்ணு அவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

"கோவை ஆலைத் தொழிலாளர்கள் திடீர் வேகமாக வேலைநிறுத்தத்தையோ, அல்லது பிறவகைப் போராட்ட முறைகளையோ கையாள வேண்டாம்" என்றும் அண்ணு அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

கோவை ஆலைகள் நிலைமை குறித்துத் தாம் மத்திய வணிக அமைச்சருடன் பேச்சு நடத்தியதாகவும் மீண்டும் நாளை அவரைச் சந்தித்துப் பேசப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நெசவாலைகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு ஒரு முடிவுகாணத் தாம் எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்வதாக அண்ணு அவர்கள் உறுதியளித்துள்ளார்.

பெரும் வரி விதிப்புக்கு எதிர்ப்பு

நிதி வசதியைத் திரட்டும் பொறுப்பை மத்திய அரசே ஏற்கக் கோரிக்கை

‘வளர்ச்சித் துறையில் முயற்சி தேவை’ என வற்புறுத்தல்

‘பாதுகாப்புச் செலவுகள் பற்றி மறுபரிசீலனை தேவை’— தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் முதலமைச்சர்கள் யோசனை

புதுடில்லி, மே 17—

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி இன்று விவாதித்தது; முதல் நாள் கூட்டத்தில் பதினைன்கு மாநிலங்களின் முதலமைச்சர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தனர்; திட்ட அறிக்கையில் மதிப்பிட்டுள்ளபடி தேசிய வருமான வளர்ச்சி விகிதத்தை 5 அல்லது 6 சதவிகிதம் உயர்த்துவதற்குப் பொதுவாக ஒப்புதல் அளித்தனர்; எனினும், திட்டத்துக்கு வேண்டிய வசதிகளைத் திரட்டுவதில் மாநிலங்களுக்கு உள்ள இடையூறுகளைப் பெரும்பாலான முதலமைச்சர்கள் சுட்டிக்காட்டினர்; ‘வரி வசதிகளை அதிகரிப்பதற்கு இனி இடமே இல்லை’ என்று மூன்று மாநில முதலமைச்சர்கள் கூறிவிட்டனர்.

திட்டத்துக்கு நிதி வசதிகளைத் திரட்டும் முக்கியப் பொறுபபை மத்திய அரசே மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்; நிதி வசதிகளைத் திரட்டும் துறையில் மத்திய அரசு என்ன செய்யும் என்பதைப் பற்றி இன்னும் விவரமான தகவலைக் கோரினர்.

“வளர்ச்சி விகிதம் போதுமானதல்ல; இத்துறையில் பெரும் முயற்சி தேவை” என்றும் பஞ்சாப் கருத்துத் தெரிவித்தது.

“திட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி, ‘விவசாயத் துறையில் ஐந்து சதவிகித வளர்ச்சி இயலக்கூடியதே” என்று பெரும்பாலான முதலமைச்சர்கள் கருதினர். இரசாயன உரம், நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியத்தை முதலமைச்சர்கள் பலர் குறிப்பிட்டனர்.

“செலவில் சிக்கனம் செய்யும் பொருட்டு, பாதுகாப்புச் செலவு பற்றி மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்” என்று மூன்று முதலமைச்சர்கள் கூறினர், ஆனல், ‘பாதுகாப்பு முயற்சியைக் குலைக்க நாங்கள் விரும்பவில்லை’ என்பதை அவர்கள் தெளிவுபடுத்தினர்.

“சில அரசுத் துறை நிறுவனங்களின் உற்பத்தியுடன் பாதுகாப்புச் செலவு பிணைக்கப்பட வேண்டும்” என்று அவர்கள் கூறினர்.

“உணவு இறக்குமதியை நிறுத்திவிட வேண்டும்; மூன்று ஆண்டிற்குள் அமெரிக்கப் பொதுச் சட்டத்தின் 480-வது பிரிவின் கீழ் வழங்கப்படுவதை நிறுத்திவிட வேண்டும்” என்றும் பல முதலமைச்சர்கள் கூறினர்.

இன்றையக் கூட்டத்தில் மாநிலங்களின் முதலமைச்சர்களும், மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், அரியாஞ கவர்னர்களும், மத்திய அமைச்சர்களும் பங்குகொண்டனர்.

‘துணிச்சலான பொறுப்பு’ என்கிறுர் இந்திரா !

“வெளிநாட்டு நிதி உதவி குறையும் நிலைமையில், 6 சதவிகித பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிடுவது துணிச்சலான பொறுப்பாகும்; நான்காவது திட்டத்தில் ஐந்து அல்லது ஆறு சதவிகிதப் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியான வழிகாட்டி, நிதி வசதிகளைத் திரட்டும் வழியை சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் வரையறுக்க வேண்டும்”

என்று தலைமையமைச்சர் இந்திரா கேட்டுக் கொண்டார்.

திட்டக் குழுவின் துணைத் தலைவர் டாக்டர் டி. ஆர். காட்கில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“நான்காவது திட்ட காலத்தில் அதிகப்படியாக நிதி வசதிகளை எழுப்புவதற்குக் கணிசமான முயற்சி தேவைப்படுகிறது.”

சோர்வை அகற்றுவதில் கவனம் செலுத்தக் கோரிக்கை

ஆந்திர முதலமைச்சர் கே. பிருமமானந்த ரெட்டி விவாதத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“வளர்ச்சி விகிதம், நிதி வசதிகளைத் திரட்டுதல் சம்பந்தமாக எந்த அடிப்படையில் பிரேரணைகள் உத்தேசமாக நிர்ணயித்தார்கள் என்பதைப்பற்றி அதிகத் தகவல்களைக் கொடுத்திருக்க வேண்டும்.

இதற்கு முந்திய திட்டங்களின் போது நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சி விகிதங்களைச் சாதிப்பதற்குத் தடையாக இருந்த அம்சங்கள் என்னவென்பதையும் விவரமாகத் தெரிந்திருக்கவேண்டும்.

விவசாயத் துறையில் 5-சதவிகித வளர்ச்சி, இயலக்கூடிய ஒன்ருகும்; ஆனல், விளை பொருள்களுக்குக் குறைந்தபட்ச விலை கிடைக்குமென்ற உறுதியும், அவசியமான உரங்கள் கிடைக்குமென்ற உத்தரவாதமும் விவசாயிகளுக்கு இருந்தால்தான் இந்த வளர்ச்சி விகிதத்தை எய்த இயலும்.

ஆந்திரம் போன்ற மாநிலங்களில், ‘வரி விதிப்பு அளவுக்கு இதற்குமேல் இடமில்லை’ என்ற எல்லையை எட்டிவிட்டது; அதிகப்படி வரி விதிப்பு இயலக்கூடிய வரம்புக்குள் இல்லை.

நல்ல நிர்வாகத்தின்மூலம் ஓரளவு உபரி நிதி வசதிகளை எழுப்ப இயலும்.

திட்டத்திற்கான தேசிய உறுதிப்பாட்டையும், ஊக்கத்தையும் உண்டாக்கும்வகையில் நாட்டில் பரவியுள்ள சோர்வை அகற்றுவதில் முதலில் கவனம் செலுத்தவேண்டும்,”

[அடுத்து தமிழக முதலமைச்சர் அண்ணு அவர்கள் கருத்தறிவித்தார்; அவரது உரை, பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.]

சோஷலிசத்தின் கதி என்ன ?

அடுத்துக் கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“நாட்டில் தோன்றியுள்ள கடும் தொல்லைகளை எதிர்நோக்கத் திட்டக் குழு தயங்குகிறது.

‘சோஷலிசம்’ என்ற சொல் தற்செயலாக விடுபட்டதா அல்லது வேண்டுமென்றே விடப்பட்டதா எனத் தெரியவில்லை.

கொள்கை முழுவதையும் மறுபரிசீலனை செய்தாலன்றி முன்னேற்றத்திற்கு இடமில்லை.”

வருமானத்தையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும்

மத்தியப் பிரதேச முதலமைச்சர் கோவிந்த நாராயண சிங் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“அந்தந்த மாநிலத்தின் தலா வருமானத்தை அடிப்படையாகக்கொண்டு வரிமுயற்சிகளை வகுக்க வேண்டும். இதற்கு அடிப்படையான குறைந்தபட்ச அளவை நிர்ணயிக்க வேண்டும்.

இந்த மாநில வருமான வரம்புக்கு மேல் வருமானமுள்ளவர்களுக்கு மட்டுமே வரி விதிக்க வேண்டும்.”

பின்னடைந்த பகுதிகளில் கவனம் செலுத்த வேண்டும்

அசாம் முதலமைச்சர் சாலிகா பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“வரி ஏய்ப்பினுல் நிதி வசதிகள் குறைந்துவிட்டது.

“பின்னடைந்த பகுதிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்ற திட்டக் குழுவின் குறிக்கோள், வரவேற்கத்தக்கதே.”

தனியார் துறையினரிடம் நிதி வசதிகளைத் திரட்ட இயலும்

பீகார் முதலமைச்சர் போலா பாஸ்வான் சாஸ்திரி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“உணவுத் தானிய இறக்குமதிகளை நிறுத்த வேண்டும்.

“பெரிய நகரங்களில் குவிந்துள்ள தனியார் தொழில் துறையினரிடம் நிதி வசதிகளைத் திரட்ட இயலும்.”

ஊக்கம் ஏற்படாவிடில் நன்மை ஏதுமில்லை !

குசராத் முதலமைச்சர் இதேந்திர தேசாய் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“வளர்ச்சி விகிதம் சம்பந்தமான தகவல்கள் போதுமானதன்று. பள்ளிகளிலிருந்தே — கல்லூரிகளிலிருந்தே கல்வியுடன் வேலை வாய்ப்புகளை இணக்கமாக அமைப்பது நன்மை தரக்கூடியது.

“சாதாரண மனிதர்களுக்கும் திட்டத்தில் ஊக்கம் ஏற்படாவிடில், நாட்டிற்கு விமோசனமே இல்லை”

கடன்களுக்குப் பதில் மானியம் வழங்கக் கோரிக்கை

காஷ்மீர் முதலமைச்சர் ஜி. எம். சதீக் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“காஷ்மீரில் நேர்முக வரிமூலம், அதிகபட்ச நிதி வசதிகளைப்பெற இயலாது.

பின்னடைந்த பகுதிகளுக்கு மத்திய அரசு கடன்களுக்குப் பதில் மானியம் வழங்கவேண்டும்.

சில கிராமியத் திட்டங்களுக்கு நிதி வசதியைத் திரட்ட, கிராமக் கடன் பத்திரங்களை வெளியிடலாம்”

என்று மாராட்டிர முதலமைச்சர் வி. பி. நாயக் யோசனை தெரிவித்தார்.

“சிறு சேமிப்பை அதிகரிக்கலாம்” என்று ஒரிசா, பீகார் முதலமைச்சர்கள் கூறினர்; வரிகள் இல்லாமல் வேறு வழிகளில் நிதி வசதிகளைத் திரட்டுவதை அவர்கள் விரும்பினர்.

அகதிகளுக்குத் தரப்பட்ட கடன் வசூலாகாவிடில் !

புதுடில்லி, மே 17—

பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் வெளியேற்றப்படும் அகதிகளுக்குத் தரப்படும் கடன்கள் வசூலாகவில்லையென்ருல், அதில் பாதியை, மாநிலங்கள் ஏற்க வேண்டுமாம் !

கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளுக்கு அளிக்கப்பட்ட கடன் வசூலாகாவிட்டால், முழுத் தொகையையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமாம் !

இவ்வாறு, ‘அகதிகளுக்குத் தரப்படும் கடனில் மாநிலங்களின் பங்கு என்ன?’ என்பதை நிர்ணயிப்பதற்காக டெல்லியில் நடைபெற்ற அகதிகள் மறுவாழ்வுத் துறை செயலாளர்கள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாம்.

இம்மாநாட்டில் — தமிழ்நாடு, கேரளம், அசாம், ஆந்திரம், பீகார், உத்தரப் பிரதேசம், ஒரிசா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

வடக்கே மற்ருெரு பெரிய திட்டம்

ரூ. 89 கோடியில் உர ஆலை

புதுடில்லி, மே 16—

குசராத் மாநிலத்தில் கண்ட்லாவில் நைட்ரசன் இரசாயன உர ஆலை ஒன்றைக் கட்டுவதற்கு இந்திய-அமெரிக்கக் கூட்டுறவு நிலையங்கள் சேர்ந்து பணியாற்றுகின்றன. 11 கோடி 90 இலட்சம் டாலர் (ரூ. 89¼ கோடி) முதலீட்டில் உருவாகும் உர ஆலை இது.

“கூட்டுறவு நிலையங்கள் மேற்கொண்டுள்ள உலகிலேயே மிகப் பெரிய அனைத்துலக வர்த்தகப் பேரம் இந்தத் திட்டம்” என்று கூறப்படுகிறது.

இந்த ஆலை நாள் ஒன்றுக்கு 910 மெட்ரிக் டன் நீர் வாங்கப்பெற்ற அமோனியா (83 சதவிகிதம் நைட்ரசன்) உற்பத்தி செய்யும். இந்த அளவு, ஆண்டுக்கு எட்டு இலட்சம் டன்னுக்கு அதிகமான கலவை இரசாயன உரத்துக்குச் சமமாகும்.

இந்த ஓர் ஆலையே ஆண்டுக்கு 22 இலட்சம் டன் அதிகப்படி நெல் அல்லது கோதுமை விளைவிக்கக் கூடும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவில் உற்பத்தியாகும் இந்த இரசாயன் உரம் வெளிநாட்டுச் செலாவணி மிச்சப்படுவதற்கும் வகை செய்யும். இந்தியா இப்பொழுது சுமார் ரூ. 300 கோடி மதிப்புள்ள இரசாயன உரம் இறக்குமதி செய்கிறது.

இலங்கையிலிருந்து திரும்பும் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு

தமிழக அரசு திட்டம்

புதுடில்லி, மே 17—

இலங்கையிலிருந்து திரும்பும் தமிழர்களுக்காக நீலகிரி மாவட்டத்தில் 3,750 ஏக்கர் பரப்பளவில் தேயிலைத் தோட்டங்களை ஏற்படுத்துவதற்குத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது.

ஆண்டுக்கு 250 ஏக்கர் வீதம் பதினைந்தாண்டுக் காலத்தில் 3,750 ஏக்கர் நிலத்தில் தேயிலை பயிரிடப்படும்.

1968—69 முதல் 1970—71 வரையுள்ள காலததில் 500 குடும்பங்களுக்கோ அல்லது 1,000 பேர்களுக்கோ இங்கு வேலை தரப்படும்.

‘பியட்’ டாக்சியில் 4-பேர் ஏறலாம்

அமைச்சர் மு. கருணுநிதி திட்டவட்டமான அறிவிப்பு

சென்னை, மே 18—

“சென்னை நகரில் ‘பியட்’ டாக்சிகளில் 4-பேர்களை ஏற்றினுல், அந்த டாக்சி ஓட்டுபவர்கள்மீது வழக்குப் போடப்படமாட்டாது” என்று அமைச்சர் மு. கருணுநிதி அவர்கள் மீண்டும் திட்டவட்டமாக அறிவித்தார்.

“‘பியட்’ டாக்சியில் 4-பேர்களை ஏற்றலாம்; அப்படி ஏற்றினுல் போலீசார் பிடிக்கமாட்டார்கள்” என்று முன்பே அமைச்சர் கருணநிதி அறிவித்திருந்தார்; இருந்தும் டாக்சி டிரைவர்கள், 4-பேரை ஏற்ற மறுத்தார்கள்.

“அமைச்சர் அறிவிப்புக்குப்பிறகும், போலீசார் பிடித்து வழக்குப் போட்டிருக்கிருர்கள்” என்று டாக்சி டிரைவர்கள் சங்கத்தின் சார்பில் கூறப்பட்டது. இந்த விவரம் இன்று அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

“இனி வழக்குகளைப் போட வேண்டாம் என்று போக்குவரத்துத் துணைக் கமிஷனரிடம் அரசு திட்டவட்டமாகக் கூறியுள்ளது; இதேபோல் டாக்சி பெர்மிட்டிலும் 4-பேர்களை ஏற்ற அனுமதித்து மாற்றிக் கொடுக்கும் வேலை நடக்கிறது; 4-பேர்களை ஏற்றுவதால் அதிகக் கட்டணம் ஏதும் கொடுக்க வேண்டியதில்லை; இனிப் போலீசார் நிச்சயம் வழக்குப் போடமாட்டார்கள்” என்றும் அமைச்சர் திட்டவட்டமாக உறுதி கூறினுர்.

சென்னைக் கல்லூரியில் புதிய ஆராய்ச்சி

சென்னை, மே 18—

‘திரிப்ஸ்’ என்று கூறப்படும் சின்னஞ்சிறு பூச்சிகளைப் பற்றிய புதிய ஐந்தாண்டு ஆராய்ச்சித் திட்டம் ஒன்று இங்கு லயோலாக் கல்லூரியில் தொடங்கப்பெற்றுள்ளது. இதற்கு அமெரிக்க அரசு ரூ. 4,10,200-க்கு ஒரு மானியம் வழங்கியிருக்கிறது.

தமிழில் படித்துப் பட்டம் பெற்றோருக்குச் சலுகை

தமிழ் பயிற்சி மொழியாக வளருவதற்கு அரசு அளிக்கும் ஊக்கம் !

சென்னை, மே 18—

தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பட்டதாரிகளை வைத்துக்கொள்ளக்கூடிய வேலைகள் என்னென்ன இருக்கின்றன என்று எல்லாத் துறைகளையும் அரசு கேட்டிருக்கிறது. இதற்கு எல்லாத் துறைகளிலிருந்தும் இன்னும் விவரங்கள் வந்து சேரவில்லை; எனினும், அம்மாதிரி வாய்ப்புக்களைக் கண்டறிய விரைவில் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட பட்டதாரிகளுக்கென வேலைகளை ஒதுக்கிவைத்து, தமிழைப் பயிற்று மொழியாகக் கொள்ள மாணவர்களுக்கு ஊக்கமளிப்பதே அரசின் நோக்கமாகும்.

"எல்லா அரசு அலுவல்களிலும் படிப்படியாகத் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட பட்டதாரிகளுக்குச் சலுகையளிப்பதே அரசின் இறுதி நோக்கமாகும்" என்று அதிகாரி ஒருவர் கூறினர்.

அடுத்த 1968—69 கல்வி ஆண்டிலிருந்து எல்லா அரசுக் கல்லூரிகளிலும், பட்டப் படிப்புக்களில் விஞ்ஞானமல்லாத பாடங்கள் தமிழில் கற்பிக்கப்படும். விஞ்ஞானப் பாடங்களைக்கூடத் தமிழில் போதிக்கும் வகுப்பு ஒன்று இருக்கும். இதன் விளைவாக, ஆங்கிலத்தில் கற்பிக்கும் தனியார் கல்லூரிகளில் சேர விரும்பும் மாணவர்களின் தொகை மிக அதிகமாகிவிடும் என அஞ்சப்படுகிறது.

தமிழக அரசு அலுவல்களில் சில குறிப்பிட்ட பதவிகளுக்குத் தமிழைப் பாடமொழியாகக் கொண்டு படித்த பட்டதாரிகளையே நியமிப்பது என்ற திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டம் இந்த ஆண்டு இறுதி அல்லது அடுதத ஆண்டு முடிவில் முழுமையாகச் செயலபடத் துவங்கும் என்று தெரிகிறது.

விவசாயம், கூட்டுறவு, தொழிலாளர் நலன், செய்தி விளம்பரத் துறை போன்ற துறைகளில் தமிழைப் பயிற்சிமொழியாகப் படித்த பட்டதாரிகளையே நியமிக்க அரசு எண்ணியுள்ளதாகச் சில திங்களுக்குமுன்பு சட்டமன்றத்தில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கூறியிருந்தார்.

அத்திட்டம், அநேகமாக இவ்வாண்டின் இறுதியிலோ அடுத்த ஆண்டுத் தொடக்கத்திலோ செயல்படுத்தப்படலாம்.

தமிழகத்தில் உள்ள அரசினர் கல்லூரிகளில் புகுமுக வகுப்பு மானிட இயல் பிரிவுகள் அனைத்திலும், வரும் ஆண்டுமுதல் தமிழே பாடமொழியாக இருக்கும்.

இதுவரையில், புகுமுக வகுப்பில் ஒரு பிரிவில் மட்டுமே தமிழ்ப் பாடமொழியாக இருந்துவருகிறது; அடுத்த ஆண்டு தமிழ் மட்டுமே பாடமொழியாக இருக்கும்.

"புகுமுக வகுப்பில் விஞ்ஞானப் பாடங்களை ஒரு பிரிவிலாவது தமிழில் நடத்த முயற்சி மேற்கொள்ளப்படும்" என்று கல்வித் துறை அதிகாரி ஒருவர் கூறினர்.

செஞ்சியில் பாராட்டுக் கூட்டம்

சி. வி. எம். அண்ணமலை கலந்துகொண்டார்

செஞ்சி விவசாயிகள் சங்கச் சார்பில் தென்னுற்காடு மாவட்ட விவசாய விளைபொருள் விற்பனைக் கழகத் தலைவர் வண்டிப்பாளையம் சுப்பிரமணியம் அவர்களுக்கும், இயக்குநர்கள் டி. ஏ. எஸ். பாலன் பி.ஏ.பி.எல்., எம்.சி., எஸ். சகாதேவன் ஆகியோருக்கும் பாராட்டு வழங்கும் வகையில் செஞ்சியில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சண்டிசாட்சி ஊராட்சித் தலைவர் திரு. எஸ். கிருட்டினசாமி தலைமை வகித்தார்.

தென்னுற்காடு மாவட்ட தி. மு. க. செயலாளர் இரா. சாம்பசிவம், சட்டமன்ற உறுப்பினர்கள் வி. முனுசாமி, ஆர். ஆர். முனுசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

விவசாயிகள் சார்பில் செஞ்சி ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர் எஸ். விஜயராகவன் பாராட்டுரை படித்தளித்தார்.

வல்லம் ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர் சுந்தரமூர்த்தி, செஞ்சி அபுபக்கர், திண்டிவனம் நகர தி. மு. க. செயலாளர் எஸ். பக்கிரி, செயற்குழு உறுப்பினர் துரை, வழக்கறிஞர் ஜே. பாண்டுரங்கன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினுர்கள்.

இறுதியில், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளர் சி.வி.எம். அண்ணமலை எம்.எல்.ஏ. அவர்கள் பாராட்டிப் பேசுகையில், 'இம்மாதிரி விவசாயிகள் சங்கங்களைக் கழகத் தோழர்கள் ஆங்காங்கே உருவாக்கி, அவர்களுக்கு தமிழக அரசு விவசாயத்துறையில் மேற்கொண்டுள்ள வேலைத் திட்டத்தை விளக்குவது அவசியம்' என்றுர்.

பாராட்டுரைக்கு நன்றி தெரிவித்து தோழர்கள் சகாதேவன், டி. ஏ. எஸ். பாலன், வண்டிப்பாளையம் சுப்பிரமணியம் ஆகியோர் பேசுகையில், விவசாயிகளுக்காகத் தென்னுற்காடு மாவட்ட விவசாய விளைபொருள் விற்பனைக் கழகத்தில் புதிதாக பதவி ஏற்ற பிறகு செய்துவரும் நன்மைகளையும், விவசாயிகளுக்கு தமிழக அரசு செய்துவரும் சாதனைகளையும் விளக்கினர்.

குருடர்-செவிடர்கட்குக் கல்வி உதவிப் பணம்

மத்திய அரசு அறிவிப்பு

புதுடில்லி, மே 18—

பார்வையிழந்த—காது கேளாத—மற்ற வகையில் உடல் ஊனமுள்ள மாணவர்கள், பொதுக் கல்வி—நுட்பக் கல்வி—தொழிற் கல்வி ஆகியவற்றையும், பயிற்சி வகுப்புகளையும், மேற்கொள்வதற்கு வசதியாக மத்திய அரசு 1968-69-ம் ஆண்டுக்கான உதவிப் பணம் வழங்குவது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவிப் பணம் தற்போது 1969 மார்ச் 31-ஆம் நாள் வரையில் நீடிக்கும். ஒரு குறிப்பிட்ட கல்விக் கட்டம் அல்லது பயிற்சிக் கட்டம் வரையில் ஆண்டுக்காண்டு அவற்றைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

பார்வையிழந்த—காது கேளாத மாணவர்களைப் பொறுத்து இந்த உதவிப் பணம் பெறுவதற்கு அவர்கள் 16 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

உடல் ஊனமுள்ள மாணவர்கள் 12 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

விண்ணப்ப நமூனுக்கள், விதிகள் முதலியவற்றை மாநில அரசுகள், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளின் கல்வித்துறை அல்லது சமூக நலத்துறையிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு முடிவுகள்

அமைச்சர் தகவல்

சென்னை, மே 17—

"பள்ளி இறுதி வகுப்பு (எஸ்.எஸ் எல்.சி.)-த் தேர்வு முடிவுகள் இத்திங்கள் இறுதியில் வெளியாகிவிடலாம்"

என்று கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் கூறியுள்ளார்.

தமிழகத்தில் இவ்வாண்டில் சுமார் 2,20,000-பேர் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு எழுதியுள்ளனர்.

"விடைத் தாள்கள் திருத்தப்பட்டுவிட்டன; அவற்றின் மதிப்பு எண்களை புத்தகங்களில் பதியும் பணி நடந்து முடிவுறும் தருவாயிலிருக்கின்றது; எனவே, இத்திங்கள் இறுதிக்குள் முடிவுகள் வெளியிடப்படும்; அல்லது, ஜூன் 1-ம் நாள் வெளியிடப்பட்டுவிடும்"

என்று விளக்கியுள்ள அமைச்சர், 'புகுமுக வகுப்பு (பி.யு.சி.)-த் தேர்வு முடிவுகள் ஜூன் மத்தியில் வெளியாகலாம்' என்றும் குறிப்பிட்டார்.

ரூ. 2 கோடி அந்நியச் செலாவணி ஈட்டித் தரும் சென்னை கைக்குட்டை

ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதியாவதில் சங்கடம்

பத்தாயிரம் கைத்தறிகளுக்கு நெருக்கடி நிலை

சென்னை, மே 18—

அசல் 'சென்னைக் கைக்குட்டை' ஏற்றுமதி கடந்த இரண்டு வாரங்களாக நின்றுவிட்டது.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகள் இந்தத் தனி ரகத் துணிகளை நீண்டகாலமாகத் தருவித்துக் கொண்டிருந்தன.

சென்ற ஆண்டில், 'சென்னைக் கைக்குட்டை'கள், ரூ.2கோடி அளவுக்கு அந்நியச் செலாவணியைத் தேடித் தந்தன !

நைஜீரியாதான் இத்துணிக்கு முக்கிய வாடிக்கை நாடு; அங்கிருந்து அண்மைச் சந்தைகளுக்கு மறு ஏற்றுமதி செய்வது வழக்கம். ஆனல், ஏப்ரல் 29 முதல் நைஜீரியா கண்டிப்பான லைசென்சு முறையைக் கொணர்ந்தது. அங்குள்ள இறக்குமதியாளர்கள் லைசென்சு வழங்குமாறு கோரியும், இதுவரையில் லைசென்சு தரப்படவில்லை.

கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சிக் குழுவினர், நைஜீரிய அரசிடம் இதைப் பற்றிப் பேச்சுவார்த்தை ஆரம்பித்துள்ளனர்.

"சீன, ஜப்பானியப் போட்டியும் இறக்குமதித் தீர்வைகளும் தேக்கத்திற்குக் காரணமாகும்" எனக் கூறப்பட்டிருக்கிறது.

கோடு போட்ட 'சென்னைக் கைக்குட்டை'யை நைஜீரியப் பெண்மணிகள், தங்கள் தலையில் அணிந்துகொள்வர்.

விழாக்களில் இது முக்கிய அணியாகும். ஆண்கள் நாள்தோறும் பயன்படுத்துவார்கள்.

சென்னையைச் சுற்றியுள்ள ஊர்களில் 10,000 கைத்தறிகள், இந்தத் தனி ரகத்தை நெய்கின்றன.

திருச்சி நகர எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றம்

மேற்படி மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல், 28—4—68-ல் தோழர் அகிலாண்டம் தலைமையில் நடைபெற்றது; கீழ்க்கண்டோர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

• தலைவர்: ஜி. அன்புமணி; துணைத் தலைவர் : பி கிருஷ்ணராஜ்; செயலாளர் : ஜி ஜெயபால் ; துணைச் செயலாளர் : எம். கந்தசாமி ; பொருளாளர் : டி. இராமானுஜம் ; துணைப் பொருளாளர் : கே. நலலதம்பி ; பொறுப்பாளர் : பி. அகிலாண்டம் ; பிரச்சார செயலாளர் : பி. இராமலிங்கம் ; செயற்குழு உறுப்பினர்கள் : வி. பரமசிவம், ஜி. சிங்காரம், டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, எஸ். நாராயணன், வி. ஆர். அர்ச்சுனன், ஜி. துரைராசன், ஜி. ஜனார்த்தனன், ஏ. ஜோதிவேல், பி. கே. செயராமன், சி. ரெங்கனதன், ஓ. எஸ். இராமமூர்த்தி, எஸ். ஆர். ஜெயகிருஷ்ணன.

ஆலந்தூர் அன்பழகன் மன்றம்

ஆலந்தூர் பேராசிரியர் அன்பழகன் மன்ற நிர்வாகிகள் தேர்தல் சைதை வட்ட தி.மு.க. அவைத் தலைவர் ஆலந்தூர் எஸ். பாலன் தலைமையிலும்—சைதை வட்டப் பிரதிநிதி இர. கோதண்டராமன் முன்னிலையிலும் நடைபெற்றது; கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர் : இராமசாமி ; செயலாளர் : கே. லோகநாதன்; துணைச் செயலாளர் : க. கோ. மணி ; பொருளாளர் : எம். நடராசன் ; செயற்குழு உறுப்பினர்கள் : சி. தருமன், வி. இராமச்சந்திரன், ஜி. நடராசன், ஆர். பக்தவத்சலு, ஆர். எஸ். பாரதி, ஏ. அருணகிரி, ஆர். மணி.

நாகர்கட்கு செஞ்சீனுவில் போர்ப் பயிற்சி

2,000 பேர் சென்றிருப்பதாகத் தகவல்

இம்பால், மே 17—

தனி நாடு கோரும் புரட்சி நாகர்கள் 250 பேர் செஞ்சீனுவில் கொரில்லாப் போரிலும், மற்ற புரட்சி நடவடிக்கைகளிலும் பயிற்சி பெறுவதற்காக மேல் பர்மாவை வெற்றிகரமாகக் கடந்து சென்றுவிட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இந்தியா – பர்மா எல்லையில் உள்ள காவல்கட்டுகளையெல்லாம் ஏமாற்றிவிட்டு எப்படியோ தப்பிச் சென்றிருக்கின்றனர்.

'நாகர்களின் இராணுவத் தளபதி' என்று சொல்லிக் கொள்ளும் ஜெனரல் மௌ அங்காமி உட்பட சுமார் 2,000 நாகர்கள் இன்னும் செஞ்சீனுவில் இராணுவப் பயிற்சி பெற்றுக் கொண்டிருப்பதாக இன்னெரு செய்தி கூறுகிறது.

சீனுவில் பயிற்சியை முடித்துக் கொண்டு 50 நாகர்கள் அண்மையில் நாகாலாந்துக்குத் திரும்பியுள்ளதாகவும், மேலும் 2,000 நாகர்கள், சிறு சிறு குழுக்களாக சீனுவுக்கு இராணுவப் பயிற்சி பெறச் செல்ல இருப்பதாகவும் கூறப்படுகிறது.

வீரப்பன்சத்திரம் பேரூராட்சியின்சாதனை

ஈரோடு, மே 18—

வீரப்பன்சத்திரம் பேரூராட்சியில் 1967—68-ம் ஆண்டுக்கான வரி இனங்கள் ரூ. 65,000 முழுவதையும் பாக்கியின்றித் தொடர்ந்து இரண்டாம் ஆண்டாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

வரி இனங்களை 100 சதவிகிதமும் வசூல் செய்ததற்காக இப்பேரூராட்சி வரித் தண்டலர்கள் மூன்று பேருக்கும் ஒவ்வொரு மாதச் சம்பளம் போனசாக வழங்கப்பட்டுள்ளது.

'சென்னை மாநகராட்சியைப் பின்பற்றுக'

திட்டங்களை நிறைவேற்ற நகராட்சிகளுக்கு யோசனை

செங்கற்பட்டு வரவேற்பில் அமைச்சர் சாதிக் பாட்சா உரை

செங்கற்பட்டு, மே 16—

"நகராட்சி மன்றங்கள் தம்முடைய பல்வேறு திட்டங்களையும் நிறைவேற்ற, சென்னை மாநகராட்சி மன றத்தைப் போல்பொதுமக்களிடமிருந்து கடன் பெறலாம்"

என்று சுகாதாரத் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா (...)சனை தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சி மன்றம் ரூ. 1 கோடி வரை கடன் திரட்ட அனுமதிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, 'அதனை மற்ற நகராட்சிகளும் பின்பற்றலாம்' என்றுர் அமைச்சர்.

செங்கற்பட்டு நகராட்சி மன்றச் சார்பில் இன்று மாலை அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினுர்.

"நகரத்தின் நடுவே ஒரு சிறிய மருத்துவ மனையை நிறுவ வேண்டும்" என்று நகராட்சித் தலைவர் கேட்டுக்கொண்டதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், மருத்துவ மனைக்கான கட்டிடத்திற்கு நகராட்சித் தலைவர் ஏற்பாடு செய்தால் மருத்துவ மனை ஏற்படுத்தத் தாம் ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

நகருக்குப் பாலாற்று நீர் வழங்கும் திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்ற ஆவன செய்வதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

இந்த வரவேற்பு விழாவில் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் செ.கோ. விசுவநாதனும் கலந்து கொண்டு பேசினுர்.

நகராட்சித் துணைத் தலைவர் திரு. சி.பி. கோவிந்தராசன் நன்றி கூறினுர்.

குடும்பக் கட்டுப்பாட்டு நிலையம்

நத்தத்தில் குடும்பக் கட்டுப்பாடு நிலையத்தை அமைச்சர் திறந்துவைத்துப் பேசுகையில், புற்று நோயக்கான மருத்துவ மனை ஒன்று காஞ்சியில்—ஐ. நா. உதவி கொண்டு அமைக்கப்படவிருப்பதாகவும், அதற்காக ரூ. 17 இலட்சம் செலவில் கட்டடம் கட்டப்படவிருப்பதாகவும் அறிவித்தார்; அங்கு ரூ. 5 இலட்சம் செலவில் ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் அமைக்கப்படும் என்றுர்.

சேலத்திலும், செங்கற்பட்டிலும் மட்டும்தான் இத்தகைய குடும்பக் கட்டுப்பாட்டு நிலையம் துவக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். 'இந்த நிலையத்திற்காக அரசு ரூ 12,000 அனுமதித்ததாகவும் கூறினுர்.

"நல்ல திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு அரசுடன் ஒத்துழைக்க வேண்டும்" என்று அவர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

இந்த விழாவில் கொளத்தூர் கோதண்டம் எம்.எல் ஏ., பி என். கிருஷ்ணன், செங்கற்பட்டு நகர தி.மு க. செயலாளர் ஏ.ஆர். அன்சர், மற்றும் பலர் கலந்துகொண்டு பேசினர்.

சேலம் உருக்காலை -- புதுடில்லிக்கு முதலமைச்சர்

அண்ணா எடுத்துச் சென்றிருக்கும் புதிய திட்டம்

ரூ 7 கோடி செலவில் முழு அளவு உருக்காலை

5 இலட்சம் டன் உற்பத்திச் சக்தி கொண்டதாக இருக்கும்

பத்தாண்டுக் காலத்தில் வேண்டிய அந்நியச் செலாவணியையும் ஈட்டித்தரும்

சென்னை, மே 18—

சேலம் இரும்புக் கனியை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்து, அதன்மூலம் சம்பாதிக்கும் அந்நியச் செலாவணியைக் கொண்டு சேலத்தில் முழு அளவிலான ஓர் உருக்காலை நிறுவுவதற்கான ரூ. 7 கோடி திட்டம் ஒன்றை, 'மருபானி--இயிடா' என்ற ஜப்பானிய நிறுவனம் உருவாக்கியுள்ளது ; ஜப்பானில் உள்ள மூன்றுவது பெரிய எஞ்சினீயரிங் நிறுவனம் இது.

இந்தத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 8 இலட்சம் டன் இரும்புக் கனி வீதம் குறைந்த அளவு 10 ஆண்டுக் காலத்துக்கு ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டியிருக்கும்.

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் அண்மையில் ஜப்பானுக்குச் சென்றிருந்தபோது அவரிடம் இந்தத் திட்டம் முழுவதும் விளக்கப்பட்டது.

கஞ்சமலை இரும்புக் கனியையும், நெய்வேலிப் பழுப்பு நிலக்கரியையும் கொண்டு சேலத்தில் 5 இலட்சம் டன் உற்பத்திச் சக்தி கொண்ட உருக்காலை நிறுவும் இத்திட்டத்தின் முழு விவரங்களையும் தயாரித்துக் கொடுக்கச் சொல்லி, அதை அண்ணா அவர்கள் டில்லிக்குக் கொண்டுபோயிருக்கிறார்.

இந்தத் திட்டம் ஜப்பான், தமிழகம் இரண்டுக்கும் பொருளாதார வகையில் கட்டுப்படியாகக்கூடியதாயிருப்பதுடன், அடுத்த 10 ஆண்டுகளில் சேலம் உருக்காலைக்கு வேண்டிய அந்நியச் செலாவணியையும் சம்பாதித்துக் கொடுக்கும் என்று கூறப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்படி முதலில் கஞ்சமலையில் உள்ள மூன்று படிவங்களிலிருந்து இரும்புக் கனிகள் எடுக்கப்படும். இங்கு மொத்தம் சுமார் 1,000 இலட்சம் டன் இரும்புக் கனி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த பத்து ஆண்டில் இதில் பாதி வெட்டி எடுக்கப்படலாம்.

'மருபானி' நிறுவன நிபுணர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக சேலம் இரும்புக் கனியைப் பலவாறு ஆராய்ந்து, 'பொருளாதார வகையில் அது கட்டுபடியாகக் கூடியது' எனத் திருப்தியடைந்துள்ளனர்.

அதிக முதலீட்டுச் செலவில்லாமல் இரும்புக் கனியை வெட்டியெடுக்கும் புதுமுறை ஒன்றையும் அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

தஸ்தூர் நிறுவன நிபுணர்கள் சொன்னதைவிட இவர்களுடைய முறை இன்னும் சிக்கனமாக இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

அமெரிக்காவில் புயல்

நியூயார்க், மே 17—

அமெரிக்காவில் புதன்கிழமை இரவு வீசிய புயலில் 75-பேர் மாண்டனர்.

பல மாநிலங்கள் புயலினால் பாதிக்கப்பட்டன ; ஆயிரக்கணக்கானபேர் காயமடைந்தனர் ; மற்றும் ஆயிரக்கணக்கானபேர் வீடிழந்தனர்.

அர்கன்சாஸ் மாநிலத்தில் ஜோன்ஸ்போரோ நகரத்தைத்தான் புயல் மிகக் கடுமையாகத் தாக்கியது ; இங்கரில் 34-பேர் மண்டனர்.

அர்கன்சாஸ் மாநிலம் முழுவதிலும் 49-பேர்வரை கொல்லப்பட்டனர்.

அலபாமா, கன்சாஸ், ஒகியோ, மின்னிசோடா மாநிலங்களையும் புயல் தாக்கியது.

ஜோன்ஸ்போரோ பகுதியில் மட்டும் 275-பேர்வரை காயமடைந்துள்ளனர்.

ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, மே 17—

ஜப்பானில் மொக்கிடோ தீவில் ஏற்பட்ட நில நடுக்கத்தினால், மாண்டவர்கள் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்தது ; 246 பேர் காயமடைந்துள்ளனர் ; 8 பேர் காணப்படவில்லை.

ஏராளமான வீடுகள் கட்டிடங்கள் இடிந்து விழுந்துள்ளன. அவ்விடங்களில் மீட்பு வேலைகள் துரிதமாக நடந்துவருகின்றன.

கடந்த 15 ஆண்டுகளில் ஜப்பானில் ஏற்பட்டுள்ள மிக மோசமான நிலநடுக்கமாகும் இது.

நில நடுக்கத்தை யடுத்து கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது ; இதனால் கடலோரங்களுக்குள் வெள்ளம் புகுந்தது ; 1000-க்கும் அதிகமான வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் மின்சார வசதி இன்னும் சீர்படவில்லை.

வடநாட்டில் இரயில் கொள்ளை

கயா, மே 17—

ஒரு காட்டுப் பகுதியில் பெண்கள் — குழந்தைகள் உட்பட 200 பேர், ஒரு கூட்ஸ் இரயிலை நிறுத்தி, உணவுத் தானியங்களைக் கொள்ளையடித்தனர்.

அந்த வழியாகச் சென்ற இரயில்வே பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 4 பேர் அந்தக் கூட்டத்தினரை அடக்க முயன்றனர் ; அவர்களை கூட்டத்தினர் எதிர்த்தனர் ; இறுதியில் பாதுகாப்புப் படையினர் கூட்டத்தை அடக்கி 7 பேரைக் கைது செய்தனர்.

துப்பாக்கிச் சூடு

கயாவில் கலகம் செய்த தொழிலாளர்களை அடக்குவதற்கு இரயில்வே பாதுகாப்புப் படையினர் நான்குமுறை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

ஆளில்லாத குடிசைகளில் 5000 மூட்டைகள்

அமராவதித் திட்டப் பகுதியில் பதுக்கல் வேட்டை

ரூ. 2.50-இலட்சம் மதிப்புள்ள நெல் பிடிபட்டது

கோவை, மே 17—

அமராவதித் திட்டப் பகுதியில் சென்ற ஒரு வார காலமாக, கண்காணிப்புப் போலீசார் பல சோதனைகள் நடத்தி, பதுக்கப்பட்டிருந்த நெல் சுமார் 5,000 மூட்டைகளைக் கைப்பற்றியதாகத் தெரிகிறது.

தாராபுரம் – உடுமலைப்பேட்டை சாலையில் பல குடிசைகளில் இந்த நெல் மூட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகவும், அக்குடிசைகளில் யாரும் வசிக்கவில்லையென்றும் தெரிகிறது.

கண்காணிப்புப் பிரிவினர் உள்ளூர் உணவு வழங்கு துறை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இந்தக் குடிசைகளில் சோதனையிட்டு நெல் மூட்டைகளைக் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட நெல்லின் மதிப்பு சுமார் இரண்டரை இலட்சம் ரூபாய் ஆகும்.

சிற்றுண்டிச்சாலைகளில் விலைகள் இறங்குகின்றன !

ஈரோடு, மே 18—

ஈரோடு நகரிலுள்ள ஓட்டல்களில் தின்பண்டங்களின் விலைகள் குறைக்கப்பட்டுவிட்டதைக் கண்டு மக்கள் மகிழ்ச்சியடைந்திருக்கின்றனர்.

வடை, போண்டா, மிக்சர் ஆகியவைகள் 10 காசுக்கும், உப்புமா 10 காசுக்கும், காபி 15 காசுக்கும் விற்கப்படுகின்றன.

கழகத் தேர்தல்கள்

வேட்பாளர்கட்கு முக்கிய அறிவிப்பு

சிற்றூர்க் கிளை, பேரூர்க் கிளை, நகர உட்கிளை, பெருநகர உட்கிளை, ஆகியவை தவிர்த்து மேலுள்ள அமைப்புக்களின் எந்தப் பதவிக்குப் போட்டியிடுபவராயிருந்தாலும் (செயற்குழு உறுப்பினர் உட்பட) குறைந்தது ஐந்தாண்டுக் காலம், தொடர்ந்து -- இடையறுது கழகத்தில் உறுப்பினராக இருந்திட வேண்டும் என்பது கழகத்தின் சட்டதிட்ட விதி முறையாகும்.

போட்டியிடுபவர்மீது, 'ஐந்தாண்டுக் காலம் உறுப்பினர் இல்லை' என்ற ஐயம் எழுப்பப்படுமாயின் --- ஏற்கனவே நிர்வாகப் பொறுப்பில் இருந்த இருவர், 'அவர் ஐந்தாண்டுக் கால உறுப்பினர்' என்பதற்கான உறுதியளிப்பின், அவரது வேட்பு மனுவை ஆணையர் ஏற்றுக்கொள்வார். பின்னர், தலைமைக் கழகத்தால் ஆராய்ந்ததற்குப் பிறகு, அளிக்கப்பட்ட உறுதி தவறுயின் உறுதியளித்தவர்கள் மீதும், குறிப்பிடப்பட்ட வேட்பாளர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த ஐயப்பாட்டை முன்கூட்டியே நீக்கிக்கொள்ள விரும்புகிற --- தேர்தலில் போட்டியிட முனைகிற --- உறுப்பினர், முன்னர் உறுப்பினராக இருந்த கிளை -- வட்டம் -- மாவட்டம் -- உறுப்பினர் எண் -- அதேபோல் தற்போது உறுப்பினராக இருக்கும் கிளை -- வட்டம் -- மாவட்டம் -- உறுப்பினர் எண் ஆகிய தெளிவான விவரங்களுடன் தலைமைக் கழகத்திற்கு ஐந்து ரூபாய் கட்டணம் செலுத்தி, சான்றிதழ், முன்னரே பெற்று வைத்துக்கொள்ளலாம். இந்தச் சான்றிதழை, குறிப்பிட்ட அமைப்பின் தேர்தல் நடைபெறுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாகத் தலைமைக் கழகத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

---தலைமைக் கழகம் (தி. மு. க.)

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

20--5--68

சென்னை முதல் வட்டம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் க. அறிவழகன் எம். எல். சி., அவர்கட்குப் பாராட்டு ; மாலை 7-மணிக்கு புதுவண்ணை அருணசலாசுவரர் திடலில் ; தலைவர் : அ. தங்கராசு ; பேசுவோர் : கி. மனோகரன் எம்.பி., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., இளம்பரிதி, து. கோவிந்தசாமி, மற்றும் பலர்.

மீனம்பாக்கம்

பக்தவத்சலம் நகர் தி. மு. க. ஆதரவாளர்கள் சார்பில் மாலை 6-மணிக்கு ; தலைவர் : ஆர். பவுன்பாபு ; பேசுவோர் : காஞ்சி கல்யாணசுந்தரம், வெ. கண்ணன், ஆலந்தூர் எஸ். பாலன், இரா. கோதண்டராமன், பு. நா. இராமகிருட்டினன், இரா. மோகனரங்கம் எம். ஏ., ஆர். எஸ். பாரதி.

21--5--68

ஆலந்தூர்

பேராசிரியர் அன்பழகன் மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு அளகிரி நாயக்கன் தெருவில் தலைவர்: சி. தருமன்; பேசுவோர்: வெ. கண்ணன், எஸ். பாலன், இர. கோதண்டராமன், எஸ். வேணுகோபால், ஆர். எஸ். பாரதி, கே. லோகநாதன், ஏ. அருணகிரி, கோ. மோகன், வி. இராமச்சந்திரன்.

சென்னை 26-வது வட்டம்

எம். ஜி. ஆர். ரசிகர் மன்ற முதலாண்டு விழா ; மாலை 7-மணிக்கு சுந்தரமுதலி தெருவில்; தலைவர் : டாக்டர் டி. எஸ். கே. கரன் ; பேசுவோர் : அமைச்சர் மு. கருணாநிதி, வி. எஸ் கோவிந்தராசன் எம். எல். ஏ., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ. எஸ். இராகவானந்தம் எம்.எல்சி. என். வி. என். சோமு பிஏ.,பிஎல், மற்றும் பலர்.

சென்னை 50-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு புரசை சண்முகராய பிள்ளை தெருவில் ; தலைவர் : மு. க. ஆறுமுகம் ; பேசுவோர் : அமைச்சர் திரு. சாதிக் பாட்சா, வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., எம். குமார், ந. சு. மணி.

மணி---சாமி குழுவினர் கலை நிகழ்ச்சிகள்

மே, 20 : அறந்தாங்கி ; 21 : திருக்கோட்டியூர் ; 22 : பெரியகுளம் ; 23 : கரூர் ; 25 : மாந்துறை; 26 : மதுரை ; 27, 28 : கள்ளிகுளம் 29 : களக்காடு ; 30 : தளபதி சமுத்திரம் ; 31 : ஏர்வாடி.

அமைச்சர்

சாதிக் பாட்சா

சுற்றுப்பயணம்

மே 20 காலை 8-30 மணி : தங்கனி கோட்டா—பீடித் தொழிலாளர் மாநாடு ; 10 மணி : மாரண்டஹள்ளி—ஆரம்ப சுகாதார நிலைய திறப்பு விழாவும், துப்புரவுத் தொழிலாளர் காலனித் திறப்பு விழாவும் ; பிற்பகல் 3 மணி : பாலக்கோடு—ஊராட்சி மன்ற வரவேற்பு ; 4 மணி : பாப்பாரப்பட்டி—ஊராட்சிமன்ற வரவேற்பு ; மாலை 4-30 மணி : பாப்பாரப்பட்டி— துப்புரவுத் தொழிலாளர் காலனிக்குக் கால்கோள் விழா ; 6 மணி : அரூர்—சீரணிப் படையினரால் கட்டப்பட்ட பள்ளித் திறப்புவிழா ; இரவு 7 மணி : அரூர்—பொது மக்கள் வரவேற்பு.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.